செய்தி வெளியீடு எண் :2478 நாள் : 10.12.2023

**மிக்ஜாம் புயல் காரணமாக, பாதிக்கப்பட்ட சென்னை வேளச்சேரி, பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருட்களை, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் வழங்கினார்கள்.**

மிக்ஜாம் புயல் காரணமாக, வரலாறு காணாத அளவில், தொடர்ந்து பெய்த கனமழையினால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் பெரிதும் பாதிப்படைந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், பாதிப்புள்ளான வேளச்சேரி பகுதிகளுக்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை தொடர்ந்து 6வது நாளாக இன்றும் (10.12.2023) வழங்கினார்கள்.

சென்னை, கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி வளாகத்தில் இருந்து லாரிகளில் நிவாரணப் பொருட்களை ஏற்றிக் கொண்டுச் சென்று, அப்பகுதி மாமன்ற உறுப்பினர்கள் மூலமாக, வேளச்சேரி பகுதியில் உள்ள திரௌபதி அம்மன் கோவில் தெரு, ஜெகநாதபுரம் தெரு, ஊரனியம்மன் கோவில் தெரு, தண்டபாணி தெரு, உத்தேரி கரை ராஜத்தெரு, நடராஜன் தெரு, கபாலி தெரு, நியூ காலனி, பரமேஸ்வரன் தெரு, கோகிலன் தெரு, டான்சி நகர், வி.ஜி.பி.நகர், அன்னை இந்திரா நகர், வீனஸ் காலனி, மகாலெட்சுமி தெரு, தந்தை பெரியார் நகர் (phase–1 &2), அன்பழகன் நகர், எம்.ஜி.ஆர். நகர் (கானகம்), கட்டபொம்மன் தெரு, பிள்ளையார் கோவில் தெரு, பரணி தெரு, சரஸ்வதி

தெரு, யமுனா தெரு, பொன்னி தெரு, புத்தர் தெரு, ஸ்ரீனிவாச மின் ஹால் அருகில், கலைஞர் நகர் (178ஏ) ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, அரிசி, கோதுமை, பிரட், பிஸ்கெட் மற்றும் போர்வை ஆகிய நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள், நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் திரு.பி.சந்திரமோகன், இ.ஆ.ப., சென்னை துணை மேயர் திரு.மகேஷ்குமார், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் திரு.இரா.சந்திரசேகர், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு.கே.பி.சத்தியமூர்த்தி, சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் திரு.கே.ஆயிரத்தரசு இராஜசேகரன், நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்களும், அலுவலர்களும் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in